**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 02 இன் (அம்பத்தளை நீர் வழங்கல் முறைமை முன்னேற்றம் மற்றும் சக்தி சேமிப்பு செயற்திட்டம்) - 2022**

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 02 இன் (அம்பத்தளை நீர் வழங்கல் முறைமை முன்னேற்றம் மற்றும் சக்தி சேமிப்பு செயற்திட்டம்) 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பிரன்சிஸ் டி அபிவிருத்தி முகவரிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 செப்தெம்பர் 29 ஆம் திகதிய சிஎல்கே 1008 -01 பி ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையின் 3.4.2(எச்) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு பெரும்பாக பகுதியில் நீர் வழங்கல் நுழைவுகள் மற்றும் நீர் முறைமை வினைத்திறன் நிலைபேண் தன்மையை விரிவாக்குவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளது. கடன் வசதி உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 13,000 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியனானதுடன் அதில் ரூபா 9,100 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 70 மில்லியன் ஏஜென்ஸ் பிரான்சிஸ் டி அபிவிருத்தி முகவரால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 3,900 மில்லியன் தொகைக்கு சமமான ஐ.அ.டொலர் 30 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 செப்தெம்பர் 29 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2023 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

எனது அறிக்கையின் அட்டவணை 2.2 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர்த்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள்/கணக்காய்வு விடயம் | தொகை ரூபா. மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | ஆலோசனை சேவை அலுவலகம் மற்றும் செயற்திட்ட அலுவலகம் போன்றவற்றின் பயன்பாட்டிற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 10 மில்லியன் தொகையான கணனிகள், அலுவலக தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணம் ஆலோசனை சேவை செலவீனத்தின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, செயற்திட்ட அமுலாக்கப்பிரிவிற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 6.28 மில்லியன் கணனிகள் மற்றும் அலுவலக தளபாடங்கள் நிலையான சொத்துக்களாக காட்டுவதற்குப் பதிலாக நடைபெறும் வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | 6.28 | 10 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் 2023 ஆம் ஆண்டின் போது நிலையான சொத்துக்களின் கீழ் பதிவிடப்படும். பீஜயூ இனால் பயன்படுத்தப்படுகின்ற அலுவலக தளபாடம், உபகரணம் மற்றும் கணனி உபகரணம் ஜசீபீ/04 ஒப்பந்தகாரருக்கு இறுதிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட பின்னர் நிலையான சொத்துக்களின் கீழ் பதிவு செய்யப்படும். | சொத்துக்கள் சரியான வகைப்படுத்தலின் கீழ் பதிவுசெய்யப்பட வேண்டும். |
| (ஆ) | உரிய வெளிநாட்டு ஒப்பந்தகாரர்களுக்குரிய ஆரம்ப முற்பணங்கள் மற்றும் பிடித்துவைத்தல் பணம் போன்றவற்றின் இறுதிமீதிகள் இலங்கை கணக்கீட்டு நியமம் 21 இன் பந்தி 08 இன் பிரகாரம் உடனடி விகிதத்தை பயன்படுத்தி மதிப்பிடாமல் விற்பனை விகிதத்தை பயன்படுத்தி மதிப்பிடப்பட்டிருந்தது. | 35.6 | செயற்திட்டமானது எல்கேஏஎஸ் 21 இன் வழிகாட்டல்களை பின்பற்றுமென்பதுடன் 2023 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்ப முற்பணங்கள் மற்றும் பிடித்து வைத்தல் பணத்தினை மீள்மதிப்பபிடுவதற்கு உடனடி விகிதம் பயன்படுத்தப்படும். | எல்கேஏஎஸ் இனைப் பின்பற்ற வேண்டும். |
| (இ) | ரூபா 620 மில்லியன் மற்றும் ரூபா 390 மில்லியன் தொகையான முறையே திரட்டப்பட்ட கடன் வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள 230/2013 ஆம் இலக்க அரச கணக்குச் சுற்றறிக்கையில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் மற்றும் எல்கேஏஎஸ் 23 இன் பிரகாரம் கடன் கிரயங்களாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | 1010 | ஏஎப்டி கடனின் கடன் வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் பொதுத்திறைசேரியினூடாக செலுத்த்ப்பட்டு வருகின்றது. செயற்திட்டக் காலப்பகுதியின் போது செலுத்தப்பட்ட வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்களிற்காக ஏஎப்டி மற்றும் இலங்கை அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மூல கடன் தொகையில் ஒதுக்கீடு எதுவும் இருக்கவில்லை. ஆகையால், என்டபிள்யூ | அரச கணக்கு சுற்றறிக்கையுடன் இணங்கி செயற்திட்ட செலவினை காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

நிதிப்பிரிவால் வழங்கப்பட்ட எழுத்துமூல அறிவுறுத்தல்களின் பிரகாரம் கடன் வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் செயற்திட்ட புத்தகங்களில் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டமானது 2014 செப்தெம்பர் 29 இல் அதன் நடவடிக்கைகளை தொடங்கியிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தால் பட்டியலிடப்பட்ட காலப்பகுதிக்குள் இலக்குகளை அடைய தவறிய காரணத்தால் செயற்திட்ட காலப்பகுதி 2023 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் செயற்திட்ட நடவடிக்கைகள் தொடங்கி 8 ஆண்டுகள் கடந்த பின்னர் முறையே 70.13 மற்றும் 57.11 சதவீதமாக இருந்தது. எனினும், மீளாய்வாண்டின் போது செயற்திட்டம் 13.3 சதவீதத்தை மாத்திரம் அடைந்திருந்தது என அவதானிக்கப்பட்டதுடன் கூறுகள் ரீதியான செயன்முன்னேற்றம் பின்வருமாறுள்ளது.

| இல | நடவடிக்கைகள் | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் பதில் | | கணக்காய்வாளருடைய சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட இலக்கு (%) | அடையப் பட்ட இலக்கு (%) | | | | | |
| (அ) | 05 கிமீ, 1200 மிமீ டிஐ குழாய்களை வழங்கி குழாயிடுவதுடன் கோத்தட்டுவ 15000 கன மீற்றர் நீர்தேக்கம் மற்றும் மொரகஸ்முல்லவில் பூஸ்ரர் இறைக்கும் இல்லங்களின் நிர்மாணம் (ஐசீபீ-03) | 100 | 54.98 | ஒப்பந்த காலப்பகுதியை நீடிக்கும் சாத்தியம் மற்றும் இது செயற்திட்ட பூர்த்தியாக்கலை பாதகமாக பாதிக்கக்கூடும். | 54.98 | ஐசீபீ-03 ஒப்பந்தம் ஒப்பந்தகாரர்களின் மந்தமான செயன்முன்னேற்றம், செயற்திட்ட அமைவிடத்தை மாற்றியமை, எல்சீயினை திறப்பதற்காக அரச நிபந்தனைகள், நிர்மாண பொருட்கள் இல்லாமை, ஏஎப்டியால் வழங்கப்பட்ட நிதியானது இடைநிறுத்தப்பட்டமை போன்ற காரணங்களால் இடைநிறுத்தப்பட்டது. அதற்கிணங்க ஒப்பந்தகாரர் காலப்பகுதியை 2023 திசெம்பர் வரை நீடிப்பதற்கு கோரியிருந்தனர். | | 54.98 தற்போதுள்ள நிலைகளை சமாளிப்பதற்கும் செயற்திட்டத்தை மேலும் காலதாமதம் இல்லாமல் நிறைவேற்றுவதற்கும் துரிதமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | | | | | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| (ஆ) | அம்பத்தளையிலிருந்து எலியகவுஸ் நீர்தேக்கத்திற்கு 9 கி.மீ டச்சு வகை இரும்புக் (1200 மிமீ டையா) குழாய்கள் மற்றும் உப பாகங்களை வழங்கி குழாயிடுதல். (ஐசீபீ-04) | 100 | 95.70 | ஒப்பந்த காலப்பகுதியை நீடிக்கும் சாத்தியம் மற்றும் இது செயற்திட்ட பூர்த்தியாக்கல் பாதகமாக பாதிக்கக்கூடும். | | ஐசீபீ-04 ஒப்பந்தம் ஏஎப்டியால் வழங்கப்பட்ட நிதியானது இடைநிறுத்தப்பட்டமை, ஏனைய வளங்களிலிருந்து நிதி கிடைக்காமை ,ஒப்பந்தகாரர்களின் மந்தமான செயன்முன்னேற்றம், உரிய நிறுவனங்களிடமிருந்தான தடைகள், கொரோனா பரவல் நிலைமைகள் போன்ற காரணங்களால் இடைநிறுத்தப்பட்டது. மேற்கூறப்பட்ட தாமதங்களை அடிப்படையாகக் கொண்டு அடுத்த ஈஓரியானது 2023 யூன் 01 வரையிலும் அனுமதிக்காக அனுப்பப்பட்டிருந்தது. ஒப்பந்தமானது 2023 மே 21 இல் பகுதியளவில் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. | | எதிர்பார்க்கப்பட முடியாத நிலைமைகளை சமாளிப்பதன் மூலம் செயற்திட்டத்தை எதிர்பார்த்த காலப்பகுதியினுள் பூர்த்தியாக்குவதை உறுதிப்படுத்தல். |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| (இ) | ஏனைய உற்பத்தி வசதிகளின் குறைக்கப்பட்ட உராய்வு மற்றும் காசாக்கல் ஊடாக முறையான இயலளவு, பரிமாற்ற நட்டம் குறைத்தலுடன் திறனான பம்பினை பொருத்துவதன் மூலம் சக்தி சேமிப்பிற்காக அம்பத்தளை உற்பத்தி வசதிகளின் நியாயமான காசாக்கல் மற்றும் சக்தி சேமிப்பு (ஐசீபீ-05) | 95.60 | 53.41 | திட்டமிட்டவாறு பரிமாறற நட்டத்தைக் குறைத்தல் மற்றும் சக்தி சேமித்தல் என்பன அடைவதிலுள்ள தாமதம் செயற்திட்டத்தை குறித்த திகதியில் பூர்த்தியாக்கலை பாதகமாக பாதிக்கக்கூடும். | | ஐசீபீ-05 ஒப்பந்தத்தில் பெறுகைச் செய்முறை எதிர்பார்த்த காலத்தை விட அதிக காலத்தை எடுத்தமை, வேலைகளில் ஏற்பட்ட சிக்கல்தன்மை, வடிவமைப்பிற்காக வரலாற்றுத் தகவல்கள் இல்லாமலிருந்தமை, உபரணங்கள் மற்றும் பொருட்களை வழங்குவதில் ஏற்பட்ட முக்கியமான காலதாமதங்கள், ஒப்பந்தகாரர்களின் மந்தமான செயன்முன்னேற்றம், எதிர்பார்க்க முடியாத நிலைமைகளால் ஏற்படுகின்ற வடிவமைப்பு மாற்றம், உப ஒப்பந்தகாரர்களை நியமிப்பதில் ஏற்பட்ட மந்தமான முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்பு, மூலப்பொருட்கள் இல்லாததால் ஒப்பந்த காலப்பகுதியை நீடித்தமை மற்றும் ஏப்டியால் வழங்கப்பட்ட நிதியினை இடைநிறுத்தியமை போன்ற காரணங்களால் காலதாமதம் ஏற்பட்டது. | | ஒப்பந்த வேலைகள் முகாமைத்துவத்தால் நெருக்கமாக மேற்பார்வை செய்யப்பட வேண்டியதுடன் இழப்புக்களைக் குறைப்பதற்காக வேலைகளைத் துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | வடிவமைப்பு மீளாய்வு மற்றும் நிர்மாண மேற்பார்வை ஆலோசனை சேவைகள் (டிஆர்சீஎஸ்சீ) | 98.30 | 97 | ஓட்டுமொத்த செயற்திட்டத்தின் வெற்றியானது ஆலோசனையாளரின் வினைத்திறனான | | 4.1.1, 4.1.2 மற்றும் 4.1.3 இல் குறிப்பிடப்பட்ட காரணங்களால் சகல ஒப்பந்த பொதிகளும் நீடிக்க வேண்டிய தேவையால் டிஆர்சீஎஸ்சீ | | ஆலோசனை வேலைகள் முகாமைத்துவத்தால் நெருக்கமாக மேற்பார்வை செய்யப்பட வேண்டியதுடன் இழப்புக்களைக் |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | சேவையை அடிப்படையாக கொண்டு சார்ந்துள்ளது. எனினும், இந்தச் செயற்திட்டமானது நேரம் மற்றும் பணத்தை எதிர்பார்த்த வெளியீட்டை அடையாமல் நுகர்வதனால் நாளுக்குநாள் செயற்திறனற்றதாக மாறுகின்றது. | | ஒப்பந்தமும் நீடிக்கப்பட்டது. | | குறைப்பதற்காக வேலைகளைத் துரிதப்படுத்துவதற்கு ஆலோசனையாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் ஆலோசனை சேவைக்கான ஒப்பந்தம் 36 மாதங்களினுள் பூர்த்திசெய்வதற்காக 2015 திசெம்பர் 01 இல் ரூபா 495 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்டிருந்தது. எனினும், உள்நாட்டு மற்றும் முக்கிய நிபுணர்கள் நீண்ட காலதாமதம், ஒப்பந்தம் வழங்குவதில் வினைத்திறமையீன்மை, மற்றும் ஒப்பந்தகாரரின் நலிவான செயலாற்றல் காரணமாக மூல பட்டியலின் பிரகாரம் நகர்த்தப்பட்டிருக்கவில்லை.<br>அதனால், ஆலோசனை சேவையின் காலப்பகுதி 2023 சனவரி 31 வரை மூன்று தடவைகள் நீடிக்கப்பட்டிருந்தது. ஆகையால், செயற்திட்ட ஆலோசனை சேவையின் ஒட்டுமொத்தக் கிரயம் ஆரம்ப மதிப்பிடப்பட்ட கிரயத்துடன் ஒப்பிடும் போது ரூபா 215 மில்லியனால் அதிகரிக்கப்பட்டிருந்தது. | 4.1.1, 4.1.2 மற்றும் 4.1.3 பிரிவுகளில் கொடுக்கப்பட்டவற்றால் ஒப்பந்தப் பொதி காலதாமதத்தை விளைவித்தமை, முக்கிய நிபுணங்களுக்கு தேவையான கொடுப்பனவுகளை தவிர்ப்பதற்கு ஆலோசனை முக்கிய நிபுணர்களை நகர்த்தல். எனினும், ஒப்பந்த பொதிகளின் செயன்முன்னேற்றத்துடன் ஆலோசனை சேவை முன்னராக முக்கிய நிபுணர்களை நகர்த்துவதை சேமிப்பதன் மூலம் ஆலோசனை சேவை நீடிக்கப்பட்டிருந்தது.<br>ஆரம்ப மதிப்பிடப்பட்ட கிரயத்துடன் ஒப்பிடும் போது ஆலோசனை சேவையின் ஒட்டுமொத்த கிரயம் ரூபா 113.91 மில்லியனாக மாத்திரமிருந்தது. | ஆலோசனை வேலைகள் முகாமைத்துவத்தால் நெருக்கமாக மேற்பார்வை செய்யப்பட வேண்டியதுடன் இழப்புக்களைக் குறைப்பதற்காக வேலைகளைத் துரிதப்படுத்துவதற்கு ஆலோசனையாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஐசீபி -04 ஒப்பந்தமானது நடவடிக்கை தொடங்கப்பட்ட திகதியான 2016 யூலை 01 இலிருந்து 672 நாட்களுக்காக வழங்கப்பட்டிருந்ததுடன் அதனைத் தொடர்ந்து இது 2023 சனவரி 05 வரை நீடிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க, ஒப்பந்தகாரர் 2023 சனவரி 05 அளவில் (இடைநிறுத்தல் காலப்பகுதியைத் தவிர்த்து) 903 நாட்களிற்குப் பதிலாக 1891 நாட்களை எடுத்திருந்தனர். செயற்திட்டத்தின் செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், பௌதீக முன்னேற்றம் 95.70 சதவீதத்தை மாத்திரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடைந்திருந்தது. இருந்த போதிலும் ஒப்பந்தகாரர் 2023 யூன் 26 கணக்காய்வுத் திகதி வரையிலும் ஒப்பந்தத்தை பூர்த்தியாக்குதற்கு தவறியிருந்தார். | 4.1.2 இன் கீழ் கொடுக்கப்பட்டவை காலதாமதத்திற்கான காரணங்களாகவிருந்தது. 2023 மே 31 அளவில் பகுதியளவு ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தது. . பிரதான மிகுதி வேலைகளாக கிருமி இல்லாதொழித்தல் மற்றும் சுத்திகரிப்பு இருந்தது. எலி கவுஸ் பம்ப நிலையங்களில் இன்னமும் நிர்மாணச் செய்முறையிலிருப்பதால் இதனைச் செய்வதற்கு தேவையான நீரினைப் பெற்றுக்கொள்ள முடியாததால் கிருமி இல்லாதொழித்தல் காலதாமதம் அடைந்தது. இதனால், புதிதாக வழங்கப்பட்ட இணைப்பு தற்போதுள்ள இணைப்பிற்கு சற்று முன்னதாக இணைக்கப்பட்டிருந்தது. | மேலதிக காலதாமதங்களைத் தவிர்ப்பதற்கு வேலைகளை துரிதப்படுத்துவதற்கும் ஒப்பந்தத்தை மேற்பார்வை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கோத்தட்டுவ 15000 கன மீற்றர் நீர்தேக்கம் மற்றும் 5 கிமீற்றர், டிஐ குழாய்களை வழங்கி குழாயிடுவதுடன் பூஸ்ரர் இறைக்கும் இல்லங்களின் நிர்மாண ஒப்பந்தம் (ஜசீபீ-03) 2022 யூன் 06 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர் 2023 பெப்ரவரி 12 வரை நீடிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் முன்னேற்ற அறிக்கை பிரகாரம், 2023 மே 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 69.48 சதவீதமாக இருந்தது. எனினும், செயற்திட்டத்தின் ஆலோசனையாளர்கள் ஒப்பந்தகாரர்களின் குறைபாடுகள் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு நீண்ட காலதாமதத்தை விளைவித்திருந்தது என அறிவிக்கப்பட்டிருந்த பேதிலும் அவ் காலதாமதத்திற்கு நடவடிக்கை எடுக்காமல் செயற்திட்டத்திற்கு வேலைகளை நிறைவேற்றுவதற்கு 2023 திசெம்பர் வரையிலும் மேலதிக நேரம் கொடுக்கப்பட்டிருந்தது. | ஒப்பந்தகாரர் 2023 திசெம்பர் இறுதிவரையிலும் ஈஓரியினை கோரியிருந்ததுடன் ஊழியர்கள் பொருத்தமான ஆவணச்சான்றுகளை சமர்ப்பிக்கும் வரையிலும் அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை.<br><br>ஒப்பந்தகாரர் செயன்முன்னேற்றத்தை அதிகரிப்பதற்காக வேலைதருனர்களின் அறிவுறுத்தல்களுடன் வளங்களை (ஊழியர் மற்றும் முலப்பொருட்கள்) அதிகரித்திருந்தனர். | மேலதிக காலதாமதங்களைத் தவிர்ப்பதற்கு ஒப்பந்தகாரர் வேலைகள் நெருக்கமாக மேற்பார்வை செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | முறையான இயலளவுடன் திறனான பம்பினை பொருத்துதல் ஒப்பந்தம் மூலம் சக்தி சேமிப்பிற்காக அம்பத்தளை உற்பத்தி வசதிகளின் | 4.1.3 இல் கொடுக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் செயற்திட்டம் காலதாமதம் அடைந்தது. இந்தக் காலதாமதமானது ஒப்பந்தத்தில் ஏற்பட்ட | மேலதிக காலதாமதங்களைத் தவிர்ப்பதற்கு ஒப்பந்தகாரர் |

| | | |
|---|---|---|
| நம்பகமான காசாக்கல் மற்றும் சக்தி சேமிப்பிற்கான ஒப்பந்தம் (ஜசீ 05) 2020 திசெம்பர் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர் ஒப்பந்த காலப்பகுதி 2023 பெப்ரவரி 23 வரை மூன்று தடவை நீடிக்கப்பட்டிருந்தது. மொத்த செயற்திட்ட நடவடிக்கைகளிலிருந்து 45.60 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த ஒப்பந்தம் 2022 திசெம்பர் 31 உள்ளவாறு பௌதீக முன்னேற்றம் முறையே 53.41 சதவீதம் மற்றும் 36.84 சதவீதம் மெதுவான முன்னேற்றத்தை காட்டியிருந்தது. | நீடித்த விளைவினால் ஏற்பட்டது. சுத்திகரிப்புச் செய்முறை மற்றும் கழுவல் அறவீட்டு முறைமை நிர்மாணம் மற்றும் எம்அன்ட்ஈ வேலைகள் மீதமாகவுள்ளது. ஏனைய சிவில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட முடியும். இதனை 2023 திசெம்பர் இற்கு முன்னர் பூர்த்தி செய்யக்கூடிய சாத்தியமில்லை. மேற்கூறப்பட்ட காலதாமதத்தால் ஒப்பந்தகாரர் ஏனைய ஈஓரி இனை ஒப்பந்தகாரர் கோரியிருந்தார். அடுத்த செயற்திட்ட விரிவாக்கல் மற்றும் கடன் நீடிப்பிற்காக உரிய அமைச்சரவை அங்கீகாரம் அனுமதிக்கப்பட்டிருந்தது. (2024 யூன் 31 வரையிலும்) | வேலைகள் நெருக்கமாக மேற்பார்வை செய்யப்பட வேண்டும். |

### 3.3 களப்பரீட்சிப்பின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்

| இல | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 யூன் 26 இல் ஜசீபி – 04 இன் குழாய் இடுதல் வேலைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரீட்சிப்பின் பிரகாரம் 9200 மீற்றர்கள் 150 மீற்றர்கள் நிரந்தர நிலைநிறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், ஒப்பந்தத்தின் கீழ் குழாயிடப்பட்ட வீதிப்பிரிவின் 6,627 மீற்றர்கள் மாத்திரம் ஆர்டிஏக்கு கையளிக்கப்பட்டிருந்தது.<br>அதற்குமேலதிகமாக, நகலம்விற்றிய குழாய் இணைப்புக்களிற்கு குறுக்காக பாலமிடல் பாரியளவிலான மூலப்பொருட்களைப் பயன்படுத்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | தற்போதுள்ள பரிமாற்ற இணைப்புக்களில் புதிய களனி பாலத்திற்கு அருகில் பல தடவைகள் திருத்திய பின்னர் நீர் வெளியேறல் இடம்பெறுகின்றது. மேற்கூறப்பட்ட பிரச்சனையால் மிகுதி 150 மீற்றர்கள் நிரந்தர நிலைநிறுத்தல்கள் காலதாமதமாக்கப்பட்டது.<br>பிரதேசசபைக்குச் சொந்தமான 1000 மீற்றர் நீளமான மொத்த குழாய் அளவில் 8200 மீற்றர் மாத்திரம் ஆர்டிக்கு சொந்தமாக்கப்பட்டிருந்ததுடன் 6627 மீற்றர்கள் ஆர்டிஏக்கு கையளிக்கப்பட்டிருந்தது. மிகுதி ஆர்டிஏ இன் பங்கானது 150 மீற்றருக்கு மேலான மிகுதி நிரந்தர நிலைநிறுத்தல்கள் பூர்த்தியடையும் வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. நீர் வெளிச்செல்லலை திருத்தலை மேலும் காலதாமதப்படுத்தினால் மற்றைய பிரிவினை கையளிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | தற்போதுள்ள பிரச்சனைகளை தீர்த்து எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகளை அடைவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஜசீபீ 03 இன் கோத்தாட்டுவ 15,000 கனமீற்றர் நீர்த்தேக்கத்தின் நிர்மாணத்திற்கான ஒப்பந்தம், 05 கிமீ, 1200 மிமீ டிஐ குழாய்களை வழங்கி குழாயிடுவதுடன், | ஜசீபீ 03 இன் நிர்மாண நடவடிக்கைகளிற்கான காலதாமதத்திற்கான காரணங்கள 4.1.1 ஆம் பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளது. மற்றும் | தற்போதுள்ள பிரச்சனைகளை தீர்த்து செயற்திட்டத்தை குறித்த காலப்பகுதியினுள் |

| | | | |
|---|---|---|---|
| | மொறகஸ்முல்ல வூஸ்ரர் குழாய் வீடு மற்றும் அம்பத்தளை உயர் பம்ப்கவுஸ் 2022 யூன் 06 இல் பூர்த்தியாக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும், ஒப்பந்தத்தின் 5 கிலோமீற்றர் மொத்த குழாய் இடல் வேலைகளில் 3.2 கிலோமீற்றர் குழாய் இடல் வேலைகள் மாத்திரம் 2023 யூன் 30 வரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. அதியுயர் பம்ப் கவுஸ் மற்றும் மொறகஸ்முல்ல பம்ப் கவுஸ் போன்றவற்றின் நிர்மாணத்திற்கான வேலைத்திட்டத்தின் பிரகாரம் முறையே 2023 பெப்ரவரி 17 மற்றும் 2022 யூன் 02 அளவில் முழுமையான பூர்த்தியாக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டதுடன் அடிமட்ட கொங்கிறீட் இடும் வேலைகள் மாத்திரம் 2023 யூன் 26 அளவில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. மேலும், சவுன்ட் புறுாபிங் வேலைகள் தவிர்ந்த பாரிய சிவில் வேலைகள், அனைத்து இலத்திரனியல் மற்றும் இயந்திரவியல் வேலைகள், நிலத்தினை மட்டப்படுத்தல் வேலைகள் மாத்திரம் மொறகஸ்முல்ல பம்ப் கவுஸ் இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. அத்துடன், கின்டா கால்வாய் குறுக்காக குழாயிடல் மற்றும் மட்டினாகொட குறுக்காக குழாயிடல் போன்ற வேலைகள் பௌதீகப் பரீட்சிப்பின் போது தற்போதும் பைல் பரீட்சிப்பு நிலைமையிலுள்ளது. உயர் பம்ப் வீட்டிற்கான பெறுகையானது 2023 யூன் 26 வரையிலும் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை.<br>அதனால், பட்டியலிடப்பட்ட காலப்பகுதியினுள் மேற்கூறப்பட்ட ஒப்பந்தங்களின் பூர்த்தியாக்கலானது இடர் நிலைமையிலுள்ளதுடன் கூறப்பட்ட நடவடிக்கைகளை பூர்த்திசெய்வதற்கு எந்தவித உடனடி நிகழ்ச்சித்திட்டங்களும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏனைய சில காரணங்களானது மண் முன்னேற்றத்தின் தேவைப்பாடு, அகழ்ராட்சியின் போது சீட் பைல்ஸ் மற்றும் குழாய் இணைப்புக்கள் சரிகின்றமை, அதிக தொகையான பயன்பாட்டு இணைப்புக்கள் மற்றும் மெல்லிய பிரிவினுடாக நீர் இணைப்புக்கள் போகின்றன.<br>கின்டா கனல் மற்றும் மட்டினாகொடவிற்கு குறுக்காக பாலமிடலானது பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் டிரஸ் மாத்திரம் போடப்படவுள்ளது. ஆனால், முன்னோட்ட பைல் பரீட்சிக்கும் செய்முறை மீதமாகவுள்ளது.<br>அதியுயர் பம்ப் வீட்டிற்கான குழாய்களை பெறும் செய்முறை ஐசீபீ 03 ஒப்பந்தத்திற்கான நோக்கெல்லையின் கீழுள்ளதுடன் இது ஐசீபீ 05 ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.<br>ஒப்பந்தகாரர்கள் மேற்கூறப்பட்ட காரணங்களால் 2023 திசெம்பர் வரை காலநீடிப்பினை கோரியிருந்தனர். | அடைவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | சீரமைக்கப்பட்ட வேலைத்திட்டத்தின் பிரகாரம் கழுவல் மீட்சி செய்முறை நிர்மாணம் 2018 திசெம்பர் 15 இல் தொடங்குவதற்கும் 2022 சனவரி 21 இல் பூர்த்தியாக்கப்படுவதற்கும் பட்டியலிடப்பட்டிருந்தது. எனினும், 164 பைல்ஸ்கள் மாத்திரம் பூர்த்தியடைந்திருந்தது என 2023 யூன் 26 இல் இடம்பெற்ற பௌதீக கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது | ஐசீபீ 05 இன் காலதாமதத்திற்கான காரணங்கள 4.1.3 ஆம் பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளது.<br>அதற்கிணங்க, செயற்திட்டத்தை தொடருவதற்கான சபை அனுமதி மெதுவான செயற்பாட்டிலுள்ளது. நிதியங்களை முகாமைத்துவம் செய்வதற்காக ஊழியர்கள் நிர்மாண நடவடிக்கைகளை துரிதப்படுவதற்கு கோரியிருக்கவில்லை. | தற்போதுள்ள பிரச்சனைகளை தீர்த்து எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகளை அடைவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

அவதானிக்கப்பட்டது. ஆகையால், 2023 இற்கு முன்னர் இயந்திரவியல் மற்றும் இலத்திரனியலுடன் கழுவல் முறைமையை பூர்த்திசெய்தல் ஐயத்திற்கிடைாகவுள்ளது என அவதானிக்கப்பட்டது. மேலும், அம்பத்தல இடத்தில் 8000 கனமீற்றர் நீர்த்தேக்கத்தின் நிர்மாணமானது 2022 செப்தெம்பர் 02 அளவில் பூர்த்தியாக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டது. எனினும், பரீட்சிப்பின் பின்னர் சுவரினை கொங்கிறீட் இடல் மற்றும் மீட்சி வேலைகள் மாத்திரம் செயற்பாட்டிலுள்ளது. 16 எண்ணிக்கையான பம்கள் மற்றும் எஸ்சீடீஏ முறைமை 2023 யூன் 26 வரையிலும் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், மேற்கூறப்பட்ட தளங்களின் ஒட்டுமொத்த செயன்முன்னேற்றம் சீரமைக்கப்பட்ட வேலைத்திட்டத்திலிருந்து பின்னோக்கியிருந்தது.

நீர்த்தேக்க நிர்மாணத்தினால் கழுவல் மற்றும் சிலட்ஜ் சுத்திகரிப்பு முறைமைக்காக இடம் மட்டுப்படுத்தப்பட்டது. இதனால், கழுவல் இடத்தில் நிர்மாண வேலைக்கு காலதாமதத்தை ஏற்படுத்தியிருந்தது.
ஒப்பந்தகாரர் பௌதீக பூர்த்தியாக்கலை 2024 ஏப்ரல் 30 வரை நீடிப்பதற்கு கோரியிருந்தனர்.

## 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

| இல | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 30 வருடங்களுக்கு மேலாகவுள்ள பம்பிங் நிலையங்களிலுள்ள தற்போதுள்ள பம்புகளால் அம்பலத்தல நீர் சுத்திகரிப்பு பொறியின் அதிகூடிய சக்தி நுகர்வினை குறைக்கும் நோக்கத்திற்காக மற்றும் அதிகூடியளவிற்கு பம்புகளினை செயற்படுத்துவதற்வாக என்டபிள்யூஎஸ்டீபீ தேவையான இயலளவுகளுடன் வினைத்திறனான பம்புகளுடன் புனரமைப்பதற்கும் மீளமைப்பதற்கும், அடிமட்ட நீர்த்தேக்கங்களினை நிர்மாணிப்பதற்கும் உராய்வு நட்டங்களை குறைப்பதற்காக பெரிய விட்டத்துடனான புதிய பரிமாற்றங்களை போடுவதற்கும் திட்டமிடப்பட்டிருந்ததுடன் 2014 செப்தெம்பர் 29 இல் இச் செயற்திட்டத்திற்காக உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க, தெகிவளை, புதிய உட்சேர்ப்பு, மலிகங்கட, கொத்தட்டுவ மற்றும் எலி கவுஸ் பம்ப் நிலையங்களிற்கு முறையே 17 புதிய | காலதாமதத்திற்கான காரணங்கள 4.1.3 ஆம் விடயத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. பின்பு ஒப்பந்தகாரர்களால் அங்கீகரிக்கப்பட்ட வேலை நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் ஒப்பந்தகாரர் வேலையை செய்துமுடிக்க இயலாதிருந்தது. வால்ப்ஸ் செயற்படாமையால் பழைய அம்பத்தல நீர் சுத்திகரிப்பு பொறியினை இணைப்பதில் நடைமுறைப் பிரச்சனைகள் காணப்பட்டமையால் குழாயிடலானது காலதாமதமடைந்தது. ஆகையால், ஒப்பந்தப் பொதிகளை பட்டியல் தரவுகளின் பிரகாரம் பூர்த்தியாக்கப்பட்டிருக்க முடிந்திருக்கவில்லை. இந்த நிலமையானது ஒப்பந்தகாரர் மற்றும் ஊழியர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டுள்ளது. | முகாமைத்துவ பதிலில் உள்ளடக்கப்பட்ட பிரச்சனைகள் சாத்தியவளக் கற்கையின் திட்டமிடல் கட்டத்தில் இனங்காணப்பட வேண்டும். மேலும், முகாமைத்துவமானது உரிய ஒப்பந்தகாரரை தெரிவு செய்ய தவறியிருந்தது. ஆகையால், தற்போதுள்ள நீடிக்கப்பட்ட காலப்பகுதியினுள் செயற்திட்டத்தினை பூர்த்திசெய்வதற்கு விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | பம்ப் நிவையங்களைப் போடுவதற்கு திட்டமிடப்பட்டது. எனினும், 17 பம்ப் நிலையங்களில் 13 கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 01 பம்ப் மாத்திரம் பரீட்சிப்பு திகதியான 2023 யூன் 26 இல் 01 பம்ப் மாத்திரம் தாபிக்கப்பட்டிருந்தது. 2016 இலிருந்து செயற்திட்ட நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருந்ததுடன் எந்தவொரு பிரதான ஒப்பந்தங்களும் இந்தச் செயற்திட்டத்தின் கீழ் 2022 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், செயற்திட்டமானது நிர்வாகம், ஆலோசனை, பராமரிப்பு போன்றவற்றிற்கு பெரிய தொகையினை செலவுசெய்வதன் மூலமும் பொருளாதாரத்திற்கு எந்தவித நன்மையும் இல்லாமல் கடன் தவணைப்பணம், கடப்பாட்டுக் கட்டணங்கள், வட்டி போன்ற அரச செலவீனங்கள் அதிகரிக்கப்பட்டதால் செயற்திட்டமானது இழுத்துச்செல்லப்பட்டதுடன் அதிகூடிய சக்தி நுகர்வைக் குறைப்பதை கொண்ட நோக்கத்தினை அடையாமல் என்டபிள்யூஎஸ்டிபீயின் நீர்வழங்கலிற்கான கிரயம் அதிகரிக்கப்பட்டது. | அதற்கிணங்க, செயற்திட்டமானது திட்டமிடப்பட்டவாறு சக்தி சேமிக்கும் நோக்கத்தை அடையமுடியாதிருந்தது. | |
| (ஆ) | அம்பத்தலவிலுள்ள நீர் சுத்திகரிப்பு பொறியின் மாதாந்த சராசரி மின்சார கட்டணங்கள் 2022 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 131 மில்லியனாகவிருந்ததுடன் இது மின்சாரத்திற்காக தற்போதைய அதிகூடிய கட்டணம் இருப்பதால் இது மேலும் 2023 மே அளவில் ரூபா 203 மில்லியனிற்கு அதிகரித்திருந்தது. செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாகிய செயற்திட்டத்தினை உரிய காலத்தினுள் நிறைவேற்றல் பட்டியலிடப்பட்ட காலப்பகுதியினுள் நிறைவேற்றப்பட்டிருந்தால் இந்த வகையான செலவீனங்களை ஏற்பட்டிருக்கமாட்டாது. மேலும், ஒப்பந்தகாரர்களின் மந்தமான திட்டமிடல், மந்தமான செயன்முன்னேற்றம் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவத்தின் மந்தமான ஒப்பந்த மேற்பார்வை போன்றவற்றால் செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை | மூன்று ஒப்பந்த பொதிகளிற்கான காலதாமதத்திற்கான காரணங்கள 4.1, 4.1.2 மற்றும் 4.3 ஆம் விடயத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. நிதிகள் இல்லாத காரணத்தினால் ஏப்டி நிதியங்களை வழற்கும் வரை முன்னைய நிதியிடலிற்கு போவதற்கு பிரேரணை செய்தது. வேறுஎந்தவித தெரிவுகளும் இல்லாததால் செயற்திட்டமானது செயன்முன்னேற்றத்தை மெதுவாக்க வேண்டியிருந்ததுடன் அனைத்து மூன்று பொதிகளும் தொடருவதால் கொடுப்பனவுகளை பயன்படுத்தி தொடருகின்றது. ஆனால், செயற்திட்ட வங்கி கணக்கிலுள்ள மீதி 2023 யூலை இறுதியளவிற்காக | எதிர்பாராத நிலைமைகளை சமாளித்து செயற்திட்டத்தை குறித்த காலப்பகுதியினுள் அடைவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| அடைதலானது பாதகமாக பாதித்திருந்தது. | மாத்திரம் போதியதாகவுள்ளதுடன் 2022 யூன் இலிருந்து 2022 திசெம்பர் வரையிலும் மெதுவான செயன்முன்னேற்றத்துடன் செயற்திட்டத்தை தொடருவதற்கு சபையின் அனுமதி பெறப்பட்டது. |

## 3.5 விளைவற்ற/குறைப்பயன்பாட்டு/குறைவாகப் பயன்படுத்திய வளங்கள்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|
| செயற்திட்டத்தின் கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், கடனளிக்கும் முகவரால் செய்யப்பட்ட ரூபா 9,100 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 70 மில்லியன் தொகையான மொத்த ஒதுக்கீட்டில், செயற்திட்ட நடவடிக்கைகள் தொடங்கி 8 ஆண்டுகளும் 03 மாதங்களும் கடந்த பின்னர் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 60 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 9,942 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 42.53 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.<br>இதன்விளைவால், 2022 திசெம்பர் 31 வரை கைதவிர்க்கப்படாத கடன் மீதிகளிற்காக அரசாங்கத்தால் ரூபா 390.4 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2.2 மில்லியன் கூட்டுத் தொகையான கடப்பாட்டுக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டியிருந்தது. | 4.1.1, 4.1.2 மற்றும் 4.1.3 ஆம் விடயத்தில் கொடுக்கப்பட்ட காரணங்களால் செயற்திட்டமானது எதிர்பார்த்த திட்டத்தின் பிரகாரம் ஒப்பந்தகாரர்களிற்கு நிதிகளை வழங்குவதற்கு இயலாதிருந்தது. ஆகவே, கடன் உடன்படிக்கை பிரகாரம் அரசாங்கம் கடப்பாட்டுக கட்டணங்களை செலுத்த வேண்டியிருந்தது. எனினும், செயற்திட்டம் ஒப்பந்தத்தில் கொடுக்கப்பட்ட ஏற்பாடுகளினுள் இந்த மேலதிக வேலையின் விளைவினைக் குறைப்பதற்கு அதிகூடிய முயற்சியை எடுத்திருந்தது. | எதிர்பாராத நிலைமைகளை சமாளித்து செயற்திட்டத்தை குறித்த காலப்பகுதியினுள் அடைவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.6 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| இல | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 23 இல் ஐசீபீ 03 ஒப்பந்தத்தின் வெளிநாட்டுக் கூறின் கீழ் முற்பணக்கொடுப்பனவாக ரூபா 397.7 மில்லியனிற்குச் சமனான யூஎஸ்டி 2.1 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் மொத்த முற்பணக் கொடுப்பனவுத் தொகை ஒப்பந்தப் பெறுமதியின் 90 சதவீதத்தை செலுத்த முன்னர் அறவிடப்பட வேண்டும். எனினும், பௌதீக மற்றும் நிதிச் | முற்பணக் கொடுப்பானது ரூபா மற்றும் யூஎஸ்டி இரண்டு நாணயங்களிலும் அறவிடப்பட வேண்டும். தற்போதைய பொருளாதார சிக்கல் அதிகூடிய விலை தளம்பளால் இது ஏற்பட்டது. கொடுப்பனவுகளின் போது செய்யப்பட்ட வேலைகளுக்கும் விலைத்தளம்பல்களுக்கும் சேர்த்து கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். விலைத்தளம்பல்கள் உள்நாட்டு கூறு பகுதி (எல்கேஆர்)க்கு மாத்திரம் சேர்க்கப்படுமென்பதுடன் வெளிநாட்டுக் | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் முற்பணக் கொடுப்பனவு அறவிடப்பட வேண்டுமென்பதுடன் விலைத்தளம்பல்கள் மற்றும் ஏனையவைகள் தனியாக கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயன்முன்னேற்றம் 55 சதவீதமாகவிருந்தபோது மேற்கூறப்பட்ட முற்பணத்தில் 9 சதவீதத்தை மாத்திரம் செயற்திட்டம் அறவிட்டிருந்தது. அதற்கிணங்க, மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 692 மில்லியனிற்குச் சமனான யூஎஸ்டி 1.9 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அறவிடப்பட வேண்டியுள்ளது. மேலும், ஒப்பந்தகாரருக்குச் சாதகமாக செயற்திட்ட முகாமைத்துவத்தால் மிக மெதுவான முற்பண அறவீட்டுச் செய்முறையை பராமரித்திருந்தது என அவதானிக்கப்பட்டது. | கூறு (யூஎஸ்டி) அதேயளவிலிருக்கும். ஐசீபீ 03 முற்பணக் கொடுப்பனவில் வெளிநாட்டுக் கூறின் கீழ் மீதமாகவுள்ளது மாத்திரம் அறவிடவேண்டியிருந்தது. முற்பணம் மீளாய்வாண்டின் இறுதியளவில் அறவிடப்பட முடியாதிருந்தால் அறவீட்டின் சதவீதம் அதிகரிக்கப்படும். | |
| (ஆ) | முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு செயற்திட்டத்தின் கொடுக்கல்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளக கணக்காய்வு 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அத்துடன் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் கணக்காய்வினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. | செயற்திட்டத்தின் செயலாற்றலையும் உள்ளடக்கி கணக்காய்வு செய்ய வேண்டியுள்ளது. |